

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 13 செவ்வாய்க்கிழமை (29-09-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 306

கொக்குத்தொடுவாயில் அதிரடி

10 காவல் அரண்கள் தகர்ப்பு!

பத்து இராணுவத்தினர் பலி; 12 பேர் படுகாயமடைந்தனர்

யாழ்ப்பாணம், செப்டம்பர் 29

மணலாறு மாவட்டம் கொக்குத்தொடுவாயில் நேற்று அதிகாலை 3 45 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதல் ஒன்றில் ஸ்ரீலங்காப் படையினரின் பத்து காவலரண்கள் தகர்க்கப்பட்டன; பத்துக்கும் அதிக இராணுவத்தினர் உயிரிழந்தனர்; பன்னிரண்டு படையினர் காயமுற்றனர்; இரண்டு ஏ. கே. எல். எம் ஜி. துப்பாக்கிகள் உட்பட 9 நவீன ரகத் துப்பாக்கிகளையும் மற்றும் பல இராணுவத் தளபாடங்களையும் புலிகள் கைப்பற்றினர்.

இத்தாக்குதலின் போது படையினரின் பத்துக் காவலரண்களை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த விடுதலைப் புலிகள் பின்னர் அவற்றைத் தகர்த்தனர். புலிகள் போராளிகள் கொக்குத்தொடுவாய் இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

புலிகள் கைப்பற்றிய ஆயுதங்கள்

யாழ்ப்பாணம், செப். 29

மணலாறு - கொக்குத்தொடுவாய் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நேற்று நடத்திய வெற்றிகரத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட ஆயுத தளபாடங்களின் விபரம் வருமாறு:-

★ ஏ. கே. எல். எம். ஜி	—	02
★ அதற்குரிய மாஸின்	—	05
★ அதற்குரிய லிங்குகள்	—	471
★ ரி - 56 ரகத் துப்பாக்கிகள்	—	07
★ அதற்குரிய மகஸின்	—	14
★ நடுத்தர ரவைகள்	—	4091
★ ஏ. கே. ஹோல்ஸர்கள்	—	03
★ இராணுவத் தொப்பிகள்	—	04
★ தண்ணீர் தாங்கி	—	01
★ தலைக் கவசங்கள்	—	07
★ சப்பாத்துகள்	—	2 சோடி

(உ-3)

பாதை மாறி ஆனையிறவுக்குச் சென்ற

பயணிகள் படகை நோக்கி சூடு! நால்வரைக் காணவில்லை!!

இருவர் காயம்; படகும் பொருள்களும் கைவிடப்பட்டன

யாழ்ப்பாணம், செப். 29

ஆலங்கேணியில் இருந்து கிளாலி நோக்கி வந்த பயணிகள் படகு ஒன்று பாதை மாறி ஆனையிறவுப் பக்கம் சென்ற போது இராணுவத்தினர் அந்தப் படகை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் இருவர் காயமடைந்தனர். நால்வர் காணாமற் போயினர் ஒரு படகும் அதிலிருந்த பொருள்களுடன் கடலில் கைவிடப்பட்டது.

நேற்று அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

ஆலங்கேணியிலிருந்து கிளாலி நோக்கி வந்த இந்தப் படகு பாதை மாறி, ஆனையிறவு முகாம் அருகே கரைசேர்ந்த போது படையினர் துப்பாக்கிப் பிரயோகமும் ஷெல்தாக்குதலும் நடத்தினர் என்று கூறப்படுகின்றது;

படகில் வந்தவர்கள் தமது படகை கைவிட்டு, அதனோடு வந்த மற்றொரு பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

"அண்ணே" என அழைத்ததும் சரமாரியாகச் சூடு விழுந்தது!

ஆனையிறவுக் கரையில் நடந்த் சம்பவம்

யாழ்ப்பாணம், செப். 29

நாம் சென்ற படகு பாதை மாறி ஆனையிறவு முகாம் பக்கம் சென்றது. நாம் கிளாலி என நினைத்து கரையிறங்கி நடந்தோம். சற்றுத் தூரம் சென்றதும் இருட்டாக இருந்ததால் முன்னோக்கி 'அண்ணே!' என்று அழைத்தோம் அப்போது எம்மை நோக்கி துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன. நாம் ''ஐயோ!'' என்று குழறிக் கொண்டு திரும்பி கடற் பகுதியை நோக்கி ஓடினோம்.

நேற்று ஆனையிறவுப் பகுதியில் இடம்பெற்றதாகக் கருதப்படும் சம்பவத்தில் காயமுற்ற சின்னத்துரை மகேந்திரன் (27 வயது - ஆனைக்கோட்டை) இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறும் அவர் சம்பவம் குறித்து விவரித்ததாவது:

கொழும்பில் இருந்து கடந்த 23 ஆம் திகதி ஆலங்கேணிக்கு வந்து சேர்ந்த நான், யாழ்ப்பாணம் வருவதற்காக அங்கு காத்திருந்தேன்.

நேற்று முன்தினம் இரவு ஒரு படகில் என்னுடன் சேர்ந்து 16 பயணிகள் கிளாலியை நோக்கிப் புறப்பட்டோம். வேறு ஒரு படகும் அருகில் வந்துகொண்டிருந்

(4 ஆம் பக்கம் பார்க்க)

உதயன் ஊழியர் காலமானார்

யாழ்ப்பாணம், செப். 29

உதயன் நிறுவனத்தின் பத்திரிகை விநியோகப் பகுதியில் பணிபுரிந்த திரு. சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் நேற்றுக் காலை காலமானார் என்பதை வருத்தத்துடன் அறியத் தருகிறோம்.

கடந்த நான்கு வருடங்களாக பணிபுரிந்த அவருக்கு வயது 53. ஐந்து பிள்ளைகளின் தந்தை. கொட்டடியைப் பிறப்பிடமாக கொண்ட இவர் கொழும்பில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

குப்பிளான் பகுதியில் நேற்று கடும் சண்டை!

குப்பிளான் பகுதியில் நேற்றுக் காலை 5 30 மணி முதல் 6 30 மணி வரை விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கும் இடையில் கடும் மோதல்கள் இடம்பெற்றன.

இதையடுத்து படையினர் குப்பிளான், ஈவினை, புன்னாலைக்கட்டுவன், குட்டியப்புலம் பகுதிகளை நோக்கி கடும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

மாலை வரை [illegible] ஷெல் தாக்குதல்கள் இடம்பெற்றன.

5 வேங்கைகள் களப்பலி

மணலாறு கொக்குத்தொடுவாய் காவலரண்கள் மீது நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட அதிரடித் தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் போராளிகள் ஐவர் களப்பலியானார்கள்;

கப்டன் திருமலையான் அல்லது டேவிட் (பாலகிருஷ்ணன் டேவிட் விஜேந்திரன் — திருகோணமலை), லெப்டினன்ட் தேவநேசன் அல்லது குருசாமி (மயில்வாகனம் சந்திரகுமார் — மட்டக்களப்பு), லெப்டினன்ட் சோமசன் அல்லது கனீல் (பிலிப்பையா பிரேமானந்தன் — பருத்தித்துறை), 2 ஆம் லெப்டினன்ட் இளம்பிறை அல்லது ஞானி (பாக்கியராஜா ரவி — மூதூர்), 2 ஆம் லெப்டினன்ட் வெற்றிவேலு அல்லது நீலன் (சித்திரவேல் ராமச்சந்திரன் — கல்குடா) ஆகிய போராளிகளே வீரமரணமடைந்தவர்களாவர்; [உ-3]

வலி. வடக்குப் பகுதியில் அவ்ரோ விமானம் நோட்டம்

வலி - வடக்குப் பகுதியில் நேற்றுக் காலை 9. 30 மணியளவில் 'அவ்ரோ' விமானம் ஒன்று பல தடவைகள் வட்டமிட்டுச் சென்றது;

தாழ்வாகப் பறந்து விமானம் வட்டமிட்டதால் மக்கள் பதற்றத்துடன் பாதுகாப்பு இடங்களை நோக்கி ஓடினர்;

சுன்னாகம், மல்லாகம், அளவெட்டி, ஏழாலை பகுதிகளை உள்ளடக்கியே விமானம் வட்டமிட்டது;

இதேசமயம்—

குடா நாட்டு வான் பரப்பில் நேற்று விமானங்களும் ஹெலிகளும் அடிக்கடி பறந்து திரிந்தன.

வழமைபோலன்றி, பலாலி விமான தளத்திற்கு விமானங்கள் பலதடவைகள் வந்து இறங்கிச் சென்றதையும் காணமுடிந்தது; [உ-3-5-162]

மாதகல் பகுதியில் இருந்து நேற்றும் ஷெல் தாக்குதல்

மாதகல் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று நண்பகல் பணிப்புலம், சில்லாலைப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

ஷெல்களில் பலவும் பணிப்புலம் வெளிவளவுகளில் விழுந்து வெடித்தன. பகல் நேரங்களில் தமது வீடுகளுக்குச் சென்று சமைத்து உண்ணும் மக்கள், ஷெல் தாக்குதல்களை அடுத்து பண்ணாகம் கிராமத்துக்கு வந்து சேர்ந்தனர்; பலர் சமைத்த உணவுகளை அடுப்புடன் விட்டு விட்டு ஓடி வந்தனர். [அ-28]

பீரங்கி வெடிக்காததால் உயிர் தப்பிய பெண்மணி!

சுழிபுரம், செப்; 29

காரைநகரிலிருந்து கடற் பீரங்கி மூலம் ஏவப்பட்ட குண்டு ஒரு பெண்மணிக்கு அருகில் விழுந்தபோதிலும், அது வெடிக்காததினால் அவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

காரைநகரில் நிலைகொண்டுள்ள கடற்படையினர் நேற்று முற்பகல் பத்து மணி முதல், அடிக்கடி சுழிபுரம் புளியந்துறைப் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை நடத்தினர்;

பீரங்கிக் குண்டுகள் ஐயனார் கோவிலடியிலும் வந்து விழுந்தன; ஒரு குண்டு அப்பகுதியில் ஒரு வீட்டின் மலசலகூடத்தைத் துளைத்துக் கொண்டு, அருகில் இருந்த குடிசையையும் பிய்த்துக் கொண்டு வந்து அங்கு நின்ற திருமதி எஸ். இராசம்மா (வயது 65) என்பவருக்கு மிக அருகில் விழுந்தது. எனினும் அது வெடிக்காததால் பெண்மணி தெய்வாதீனமாகத் தப்பினார். திருமதி இராசம்மா காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வந்து சுழிபுரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

நெடுமாறன் மற்றும் மூவரை பிணையில் விட மறுப்பு!

தேசவிரோதக் குற்றச்சாட்டின் மீது கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் தமிழர் தேசியக் கட்சித் தலைவர் பி நெடுமாறன் உட்பட நான்குபேரை பிணையில் விடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை சென்னை முதன்மை மற்றும் செஷன்ஸ் நீதிபதி திரு. பி. வி கோவர்த்தன் நேற்று நிராகரித்தார்.

இந்த நால்வரின் மீதும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் கடுமையானவை என்றும்—

அவர்களைப் பிணையில் விடுவிப்பதால் புலன் விசாரணைக்குக் குந்தகம் ஏற்படும் என்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் வாதிட்டதை நீதிபதி ஏற்றுக் கொண்டார். அத்துடன் புலனாய்வு பூர்வாங்கக் கட்டத்தில் இருப்பதால் அவர்களைப் பிணையில் விடுவிப்பது முறையாகாது என்றும் நீதிபதி குறிப்பிட்டார். [உ-எ]

வேரோட நீர் வேண்டும்
நீர் தேங்க குளம் வேண்டும்

சின்னஞ்சிறு விளம்பரம்

உடன் விற்பனைக்கு

சிவப்பு- வெள்ளை சேவல் குஞ்சுகள் விலை ரூபா 20/-. மற்றும் வெள்ளை- கறுப்பு- பிறவுண் பேட்டுக் கோழிக் குஞ்சுகளுக்கும், புறொயிலர் குஞ்சுகளுக்கும், தொடர்பு: இல. 1, மத்திய சந்தை, மானிப்பாய். (5345)

தவறிவிட்டது

கந்தசாமி இராதாகிருஷ்ணன் என்ற பெயருடைய எனது 630262437 X இலக்க அடையாள அட்டை சனிக்கிழமை வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் காணாமல் போய்விட்டது. இதை கண்டெடுத்தவர்கள் 88/5. பத்திரகாளி கோவில் வீதி, வண்ணார்பண்ணை என்ற விலாசத்தில் கையளிக்கவும். [22704]

வாடகைக்கு

மாணவர்களுக்கு சாப்பாட்டுடன் அறைகள் வாடகைக்கு உண்டு. நேரில் வரவும். சாவோய் ஹோட்டல், இல. 98, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்: ஆஸ்பத்திரிக்கு அருகாமையில். [5350]

SPOKEN ENGLISH

Spoken English With Grammar and Literature, ஒருங்கமைந்த மூன்று மாதப் பயிற்சி. கிழமையில் 2 நாட்கள், ஆங்கிலத்தில் பேசப் பயிற்றப்படுகிறது. V. N. Kandasamy A. I. B. [part I] London Inter [London], 87, திருநெல்வேலி றோட், [பாலத்திற்கு அண்மையில்] கொக்குவில். [5352]

பாரதிதாசன் கல்வி நிறுவனம்

(BECON)
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

A/L 93
DAY CLASSES
A/L 92 Aug.

பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான
மீட்டல் - வினா விடைப் பயிற்சி வகுப்புகள்

பொருளியல் — எஸ். வரதராஜன்
கணக்கியல் — சௌந்தி
வர்த்தகம் — பசில்
அளவையியல் — சோதி
தமிழ் இந்து நாகரிகம் — அமரசிவம்

ஆரம்பம்:
01-10-1992
வியாழன் காலை 8-00 மணி

★ ஒரு முறையேனும் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

★ பரீட்சைகளை உள்ளடக்கிய வினா-விடைப் பயிற்சிகளாக வகுப்புகள் நடைபெறும்.

[சி-3526]

C. C. A.

வெலிங்டன் சந்திக்கருகாமை,
யாழ்ப்பாணம்.

93 A/L

வர்த்தகமும் நிதியும்
பகுதி II
செவ்வாய், வியாழன் 5—6
வினா - விடை
செவ்வாய், வியாழன் 3—4

ஆரம்பம்:
01-10-1992
வியாழன்
[சி-3529]

நிரு ரியூசன் சென்ரர்

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில்.

O/L 92

5 வருட கால வினா-விடை வகுப்புகள்

விஞ்ஞானம் — இரா. செல்வவடிவேல்
கணிதம் — இந்திரன்
ஆங்கிலம் — மகாலிங்கம்
சமூகக்கல்வி — வேணு
தமிழ் சமயம் } பண்டிதர்
வர்த்தகம் — நவம்

ஆரம்பம்:
03-10-1992
[சி-3519]

கொடிகாமத்தில் திலீபன் நினைவாக சிரமதானம்

யாழ்ப்பாணம், செப். 28

லெப். கேணல் தியாகி திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவையொட்டி, கொடிகாமம் பகுதிகளில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினால் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

கடந்த 14 ஆம் திகதி தொடக்கம் 16 ஆம் திகதி வரையும் நாவற்காடு பகுதியில் உள்ள குளம் மேலும் 1½அடி ஆழமாக்கப் பட்டு, கட்டுகளும் சீர் செய்யப்பட்டன.

17 ஆம் திகதி வரணி மகா வித்தியாலயத்தில் இருந்து ஆலடி பிள்ளையார் கோவில் வரை செல்லும் 1½மைல் நீளமான வீதியில் இரு மருங்கிலும் இருந்த பற்றைகள் வெட்டப்பட்டு வீதி செப்பனிடப்பட்டது.

இச் சிரமதானத்தினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக்கழகத்தின் கிராமிய உற்பத்திக் குழுவினரும், அப் பிரதேச மக்களும் இணைந்து சிறப்பாக செய்து முடித்துள்ளனர். [த-ம]

திருத்தம்

St. Patrick's College Jaffna

27 - 09 - 92 (ஞாயிற்றுக்கிழமை) 'உதயனில்' வெளிவந்த விளம்பரத்தின் திருத்தம் பின்வருமாறு:-

முதலாம் ஆண்டு:- 01 - 02 - 87 — 31 - 01 - 88க்குள் பிறந்திருக்க வேண்டும்.

(சி 3423) — கல்லூரி அதிபர்.

எங்கள் இதயத்தைக் கோயிலாகக் கொண்டிருக்கும் எங்கள் அன்புத் தாயாரின்

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 11 — 05 — 1911

உதிர்வு: 30 — 08 — 1992

அமரர் சிவபாக்கியம் செல்வராஜன்

அன்பின் திருவுருவே! பண்பின் பிறப்பிடமே! பாசத்தின் உறைவிடமே! அம்மா, அம்மா என்று அகமெல்லாம் வாயாக அழுதாலும் ஆறுமோ துயரம்? உங்கள் நினைவு எங்கள் நெஞ்சை விட்டு அகலாது. எங்கள் கண்ணீரைக் காணிக்கையாக்கி அன்னையின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உறவினர்கள்.

''உமா பவனம்''
சண்டிலிப்பாய் மேற்கு,
சண்டிலிப்பாய். [22701]

41ஆம் நாள் நினைவஞ்சலி

ஞானப்பிரகாசம் கீதபொன்கலன் தாவீதுப்பிள்ளை

(முதலாளி கணக்கர், போயிட்டி - இளவாலை)

ஜனனம்: 25 — 09 — 1940
அகால மரணம்: 20 — 08 — 1992

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இன்று (29 - 09 - 1992) செவ்வாய்க்கிழமை ஆனைக்கோட்டை உயரப்புலம் அடைக்கலநாயகி ஆலயத்தில் காலை 10-30 மணியளவில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

மனைவி - நவமணி, பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. [22708]

அகதி மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

இலவசமாக வழங்க முயற்சி

யாழ்ப்பாணம், செப்: 29

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை இலவசமாகப் பெற்றுக் கொடுக்கும் முயற்சியில் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஈடுபட்டுள்ளது.

ஆண்டு ஆறுக்கு உட்பட்ட வகுப்புக்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்கே இவை பெற்றுக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான அனுமதி புனர்வாழ்வு அமைச்சிடம் யாழ். அரச அதிபர் மூலமாக கேட்கப்பட்டுள்ளது. இதற்கான அனுமதியை புனர்வாழ்வு அமைச்சு வழங்கும் பட்சத்தில் அடுத்த மாதம் பருத்தித்துறையை வந்தடையும் 'குமாரி' கப்பலில் இப்பொருள்களை இங்கு தருவிக்கவும் இணையம் நடவடிக்கை எடுத்துள்ளது. [த-ம-162]

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மலிவு விலையில் மிகச்சிறந்த இயற்கைப் பசளை விற்பனை

விவசாயத்திற்கு மிகப் பொருத்தமானதாகக் கருதப்படும் வண்டல் [குளத்துத் தார்] டிராக்டர் லோட் ஒன்று [½ கியூப்] ரூபா. 125/- வீதம் விற்பனை செய்யப்படுகின்றது.

கொள்வனவு செய்ய விரும்புவோர் யாழ். மாநகர சபையின் தலைமை அலுவலகத்தில் உரிய கொடுப்பனவைச் செலுத்தி தேவையான அளவு வண்டலை கொள்வனவு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம். 28-09-1992
(சி/3424)

G. A. Q. 1993-94

பேராதனைப் பல்கலைக்கழகம்

★ இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

A/Lஇல் 3 பாடங்கள் சித்தியடைந்தவர்களும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழகப் பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விரிவுரைகள் ஆரம்பம்:

03-10-1992 8 மணி

விபரங்கள் நேர அட்டவணை என்பவற்றை நேரில் பெற்றுக் கொள்ளவும்.

நிர்வாகி,
எஸ். அருள்நங்கை.

புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(சி-3531)

கண்ணீர் அஞ்சலி

எம்மை ஆறாத்துயரில் ஆழச்செய்து மீளாத்துயில்கொள்ளும்
எமது அன்புச் சகோதரி,

திருமதி சபானந்தன் சாவித்திரி

அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் அனைவரும்
இறைவனை பிரார்த்திப்போமாக!

கண்ணீரை காணிக்கையாக்கும்,

● நிர்வாகிகள் ● ஆசிரியர்கள் ● மாணவர்கள்

புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம் -	புதிய விஞ்ஞானக் கல்விக் கழகம் -	விஞ்ஞானக் கல்வி நிலையம்
(கன்னாதிட்டி)	(யாழ். நகர்)	(நல்லூர்)

குறிப்பு:- அன்னாரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக எமது நிறுவனங்களின் வகுப்புக்கள் யாவும் இன்று ரத்துச்செய்யப்பட்டுள்ளன. (3421)

கண்ணீரைக் காணிக்கையாக்குகிறோம்

எமது நிறுவனத்தின் கலங்கரை விளக்கு
எம் பொது முகாமையாளரின் குடும்ப ஒளிவிளக்கு

திருமதி சபானந்தன் சாவித்திரி

அணைந்து விட்டது!

அக்கா! நீங்கள் அறிந்தோர்க்கெல்லாம் ஓர் அன்புத் தெய்வம், பாசத்துடன் பழகுவோர்க்கெல்லாம் வற்றாத நீரூற்று, உதவி நாடி வருவோர்க்கெல்லாம் இல்லையென்றறியா கற்பகதரு!!

உங்கள் ஆத்மா சாந்தியடைவதாக!

கலக்சி புகைப்பட சேவை
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(சி - 3422)

உதயன்

தண்டனை அவசியம்

கிழக்கு மாகாணத்தில் காணாமற்போனதாகக் கருதப்பட்ட 133 தமிழர்கள் அதிரடிப் படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ''மர்ம''த்தைக் கண்டு பிடித்தவர் அரசாங்கத்தின் மனித உரிமைகள் செயலணிக் குழுவின் தலைவரான முன்னாள் நீதியரசர் ஜே. எவ். ஏ. சூசா ஆவார்.

வெளிநாடுகள், மிகக் குறிப்பாக ஸ்ரீலங்காவுக்கு பண உதவி செய்யும் ஐரோப்பிய நாடுகள், இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்களை நிதி உதவியுடன் சம்பந்தப்படுத்தத் தொடங்கியதன் பெறுபேறு தான் மனித உரிமைகள் செயலணிக் குழு.

செயலணிக் குழு அண்மையில் வெளியிட்ட தனது முதலாவது ஆண்டறிக்கையிலும், அரசாங்கப் படையினரின் மனித உரிமை மீறல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்தது. இப்போது கூட, செயலணிக் குழுவின் தலைவர் தனிப்பட்ட முறையில் மேற்கொண்ட விஜயங்களின் போது காணாமற்போனதாகக் கருதப்பட்டவர்கள் அதிரடிப் படை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பிடித்துள்ளார்!

தமிழர்கள் விசாரணை இன்றிக் கைது செய்யப்படுவதும், பின்னர் காணாமற் போனதாக அறிவிக்கப்படுவதும் சர்வ சாதாரணமானவை. ''காணாமற் போனவர்கள்'' என்ற பதத்திற்கு படையினரால் ஒழித்துக் கட்டப்பட்டவர்கள் என்ற பொருளையே கொள்வதுண்டு. அப்படிப் பார்க்கும் போது காணாமற்போனதாகக் கருதப்பட்ட தமிழர்கள் படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பது சற்றுப் பரவாயில்லை என்ற நிலையாகும்; எனினும் 133 பேரையும் தடுத்து வைத்துக் கொண்டு காணாமற் போனார்கள் என்று அரச தரப்பில் பொய் கூறப்பட்டது பெரும் குற்றமாகும்.

அரசாங்கமும், அதன் படைகளும் மனித உரிமைகளை மீறவில்லை என்று பொய் கூறி வந்த அரசு; அடியோடு மறுத்து வந்த அரசு, இப்போது தனது குற்றத்தை, தனது படைகள் மிக மோசமாக மனித உரிமைகளை மீறுவதை ஒப்புக்கொள்ளும் அளவுக்குச் செயற்படுவது சற்று முன்னேற்றகரமானது தான்.

ஆனால், அரசு குற்றத்தை ஒப்புக்கொள்வதால் அது திருந்திவிட்டது என்றோ, இனிமேல் மனிதஉரிமைகளை மீறிக் குற்றம் இழைக்காது என்றோ அர்த்தம் அல்ல. மனிதஉரிமைகள் மீறப்படுவது தடுக்கப்பட வேண்டும்; தவிர்க்கப்பட வேண்டும். அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு.

அரசாங்க அதிகாரிகளும், அரசாங்கப் படைகளும் தமது கடமைகளை ஆற்றும் போது குற்றம் புரிந்தால் — மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டால் — அவர்களை உடனுக்குடன் தண்டிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே ஏனையோர் அதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு மனித உரிமை மீறல்களில் ஈடுபட அஞ்சுவார்கள்.

படையினரைப் பொறுத்த வரையில் அவர்கள் தமது கடமை நேரத்தில் புரியும் கொலைகளுக்கும் குற்றங்களுக்கும் தண்டனை வழங்கப்படுவதில்லை. சாதாரண பிரசைகளுக்கு வழங்கப்படாத அந்தச் சலுகை — விதிவிலக்கு — படையினருக்கு மட்டும் வழங்கப்பட்டிருப்பதால் அவர்கள் மெத்தனமாக நடந்துகொள்ள ஊக்கமளிக்கப்படுகிறது.

இந்த விதிவிலக்கு நீக்கப்பட்டு, மனித உரிமைகளை மீறும், குற்றமிழைக்கும் படையினரை சாதாரண சட்டப்படி தண்டிக்க வகை செய்யப்பட வேண்டும். படையினர் மனித உரிமைகளை மீறுகிறார்களா என்பதை கண்காணிப்பதோடு மட்டும் நிற்காமல், மனித உரிமைகளை மீறும் படையினருக்குக் கடும் தண்டனையும் வழங்க வேண்டும். அதுவே அவசியமானது.

இந்திய விஜயம்

ஜனாதிபதி பிரேமதாஸா நாளை மறுதினம் இந்தியாவுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ளுவார்.

இது சார்க் நாடுகளுக்கான அவரது சுற்றுப் பயணத்தின் இரண்டாவது கட்டமாகும்.

உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 29

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய சதுர்த்தி அபிஷேகம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு விசேட விநாயகர் பூசையுடன் நடைபெறும். (அ)

* * *

யாழ்ப்பாணம், செப். 29

உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தின் பெருநாள் திருப்பலியும், புனிதரின் திருச்சொரூப பவனியும் இன்று காலை 6.45 மணிக்கு நடைபெறும். (த)

நவராத்திரி நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செப். 29

தென்மராட்சி திவ்ய ஜீவன சங்கத்தினர் நவராத்திரி விழாவை அப் பகுதிகளில் தினத்துக்கு ஒரு கிராமத்தில் ஒரு வீட்டில் கொண்டாடி வருகின்றனர். பிரஸ்தாப சங்கத்தின் தலைவர் ஆத்மஜோதி நா. முத்தையா தலைமையில் நவராத்திரி நிகழ்வுகள் பிற்பகல் 4 மணி முதல் இரவு 6 மணி வரை நடைபெறுகின்றன.

* * *

உரும்பராய் அருள்மிகு ஞானவைரவர் தேவஸ்தானத்தில் நவராத்திரிச் சிறப்பு நிகழ்ச்சியாக நடந்துவரும் கம்பராமாயணத் தொடர் விரிவுரையில், ''கற்பினிற்கு அணி சீதை'' என்ற தலைப்பில் திரு.இ.ஜெயராஜ் இன்று உரையாற்றுவார்.

* * *

ஏழாலை களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நவராத்திரி சிறப்பு நிகழ்ச்சியாக நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் சொற்பொழிவாற்றுவார். (உ-117)

நூல் நிலையம் திறந்து வைப்பு

தென்மராட்சி, செப். 29

சாவகச்சேரி பிரதேச சபையின் புதிய நூல் நிலையம் ஒன்று மீசாலை புத்தூர் சந்தியில் நாளை காலை திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-117)

கச்சாய் நோக்கி ஷெல் வீச்சு

நேற்று முன்தினம் இரவு 9.40 மணியளவில் பூநகரி இராணுவ முகாமிலிருந்து வீசப்பட்ட இரண்டு ஷெல்கள் கச்சாய் கடற்கரைப் பகுதியில் விழுந்தன.

அவற்றில் ஒரு ஷெல் வெடித்ததில் வீடொன்று சேதமடைந்தது. மற்றைய ஷெல் வெடிக்காத நிலையில் காணப்பட்டது. (உ-117)

செஞ். குழுவின் புதிய பிரதிநிதி

யாழ்ப்பாணம், செப். 29

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக திரு. டொமினிக் டியூபோ நேற்று பதவி ஏற்றார்.

இதுவரை காலமும் இலங்கை வதிவிடப் பிரதிநிதியாக கடமையாற்றிய திரு. பியறோவின் இடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார். (உ-3)

நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், செப். 29

கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் கலாநிதி சி. மௌனகுருவின் அண்மை வெளியீடான ''புதியதும் பழையதும்'' என்னும் நூலின் அறிமுக விழா யாழ். பல்கலைக்கழக கலைப்பீட அரும்பொருள் அறையில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவிருக்கிறது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, திரு. ஏ. ஜே. கனகரட்னா, திரு. க. சிதம்பரநாதன் ஆகியோர் கருத்துரை வழங்குவர். (உ-3)

லங்கா சிமெந்து ஊழியர் சம்பளம்

யாழ்ப்பாணம், செப். 29

காங்கேசன் லங்கா சிமெந்து லிமிட்டெட் ஊழியர்களின் ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களுக்குரிய — 25 வீத — சம்பளக் கொடுப்பனவு கன்னாகத்திலுள்ள நிறுவனத்தின் தற்காலிக அலுவலகத்தில் இன்று முதல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

ஸியா உல்-ஹக்கின் மரணம்; புலனாய்வுப் பிரிவு காரணம்

இஸ்லாமபாத், செப் 29

பாகிஸ்தான் முன்னாள் ஜனாதிபதி ஜெனரல் ஸியா உல் - ஹக் 1988 ஆகஸ்டில் விமான விபத்து ஒன்றில் உயிரிழந்ததற்கு பாகிஸ்தான் இராணுவத்தின் முன்னாள் தளபதி ஜெனரல் மிர்தா அஸ்லம்பெக்கும், உள்ளூர் படையினரின் புலனாய்வுப் பிரிவுமே பொறுப்பு என்று குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஸியா உல் - ஹக்கின் மரணம் பற்றி விசாரணை நடத்த புதிதாக நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை ஆணைக்குழுவிடம் பாகிஸ்தான் விமானப்படையின் முன்னாள் லெப்டினன்ட் அக்ரம் அவான் சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

ஸியா உல் - ஹக்கின் மரணத்துக்கு —

பாகிஸ்தானின் அயல்நாடுகளுக்கு ஆயுதங்கள் கடத்தப்படுவதற்கும் உளவாளிகள் அனுப்பி வைக்கப்படுவதற்கும் தொடர்பு இருந்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

காத்மண்டுவில் மீண்டும் விமான விபத்து

லண்டன், செப். 29

நேபாளத் தலைநகர் காத்மண்டுவுக்கு அருகே பாகிஸ்தான் 'ஏயார் பஸ்' விமானமொன்று நேற்று வீழ்ந்து நொறுங்கியதில் விமானத்தில் பயணம் செய்த 167 பேரும் கொல்லப்பட்டிருக்கலாமென அஞ்சப்படுகிறது.

இரண்டு மாத இடைவெளிக்குள் காத்மண்டுவில் இடம்பெற்ற இரண்டாவது ஏயார் பஸ் விமான விபத்து இது என்பது குறிப்பிடத்தக்கது. (உ-10)

ஆட்சியை கலைத்தால் தற்கொலை செய்வதாக ஜெயலலிதா மிரட்டல்

'நக்கீரன்' வார இதழ் தகவல்

சென்னை, செப். 29

''தமிழ் நாட்டில் அ. தி. மு. க. ஆட்சியை மத்திய அரசு கலைத்தால் நான் தற்கொலை செய்து கொள்வேன்.''

தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா இவ்வாறு மிரட்டியுள்ளார்.

தனது நெருங்கிய தோழியான சசிகலாவிடம் அவர் இவ்வாறு தெரிவித்ததாக 'நக்கீரன்' வார இதழ் தகவல் வெளியிட்டுள்ளது.

''சசிகலாவின் கணவன் நடராஜன் என்னைப் பதவியில் இருந்து கவிழ்க்க முயற்சி செய்தால் நான் எனது பதவியை ராஜினாமாச் செய்வேன்'' என்றும் ஜெயலலிதா கூறியதாகவும் 'நக்கீரன்' கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

20.08-1992 'நக்கீரன்' இதழில் வெளியான அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது!

சசிகலாவின் கணவர் நடராஜன் ஜெயலலிதாவின் ஆட்சிக்கெதிராகச் சில குற்றச்சாட்டுக்களை புதுடில்லியிடம் அண்மையில் சமர்ப்பித்திருந்தார்.

இது தொடர்பாக விசாரிக்கும்படி தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங்கை மத்திய அரசு பணித்தது.

இதனை அறிந்த ஜெயலலிதா கோபம் தலைக்கேறிய நிலையில் சசிகலாவை அழைத்து ''உன்னுடைய கணவன் என்னை ஆட்சியிலிருந்து விரட்டப்பார்க்கிறான். என் ஆட்சி கலைக்கப்பட்டால் நான் தற்கொலை செய்துகொள்வேன். என் சாவுக்கு நடராஜன் தான் காரணம் என எழுதி வைத்துவிட்டே சாவேன்'' என்று சத்தம் போட்டார்.

பின்னர் ஆளுநரை சந்தித்த அவர் பதவியைத் தான் உடனடியாக ராஜினாமாச் செய்வதாகத் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த ஆளுநர் அவரை பொறுமையாக இருக்கும்படியும் தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாகவும் கூறினார்.

புதுடில்லியின் ஆதரவுடன் ஜெயலலிதாவை விரட்டிவிட்டு ஆட்சியைப் பிடிக்க நினைத்த நடராஜன் இந்த தற்கொலை செய்தியால் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்திருக்கிறார்.

ஆளுநரைச் சந்தித்து விட்டு ''போயஸ் கார்டின்'' திரும்பிய ஜெயலலிதா அன்றைய தினம் தனது அறையை விட்டே வெளியே வரவில்லை.

பயந்து போன சசிகலாவும் ஏனையோரும் செய்த முயற்சியைத் தொடர்ந்து இறுதியில் அவர் கதவைத் திறந்தார்.

ஆனால் அவர் அங்கிருந்த தொலைக்காட்சி, கண்ணாடி போன்றவற்றை அடித்து நொருக்கினார். தனது செயலாளரை கன்னத்தில் அறைந்ததுடன் அமைச்சர்களை 'வாடா போடா' என்று ஏக வசனத்தில் திட்டித் தீர்த்தார்.

இறுதியில் நிதியமைச்சர் நெடுஞ்செழியன் அவரை ஒருவாறு சமாதானப்படுத்தினார்.

மனநிலை பாதிக்கப்பட்டவர் போல் நடந்து கொண்ட ஜெயலலிதா தற்போது ஒரு நிலைக்கு வந்துள்ளார் இவ்வாறு நக்கீரன் தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளது.

ஆயுதங்கள் கையளிப்பதை விரும்புவதுபோல் நடியுங்கள்!

புலிகளிடம் இப்படிக் கூறியவர் ராஜீவ்

வடமராட்சி, செப். 29

நீங்கள் உங்களிடம் உள்ள ஆயுதங்களைக் கையளியுங்கள். ஆயுதங்களைக் கையளிப்பதை நீங்கள் விரும்பாவிடினும் கூட அதனை விரும்புவது போல் நடியுங்கள் என்று முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி எங்கள் தலைவர்களிடம் கூறினார்.

வடமராட்சியில் நடைபெற்ற தியாகி திலீபனின் இறுதி நாள் நினைவு உண்ணாவிரத நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசும்போது விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ஆர்த்தி இவ்வாறு சொன்னார்.

வடமராட்சி மகளிர் பிரிவு பொறுப்பாளர் செல்வி தணிகைச்செல்வி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் அவர் மேலும் பேசுகையில்:

ராஜீவ் காந்தியின் கபடத்தனத்தை அன்றே உணர்ந்த எமது தலைவர்கள் எமது மக்களின் பாதுகாப்பு இந்த ஆயுதங்கள் தான். அந்தப் பாதுகாப்பை நீங்கள் உறுதிப்படுத்தினால் எமது ஆயுதங்களை ஒப்படைக்க முடியும் என்றனர்;

ஆனால் நடந்தது என்ன? இதனை திலீபன் அன்றே உணர்ந்திருந்தான்: இந்தியா எமது போராட்டத்தை பலவீனப்படுத்த முயலுகின்றது என்பதை அவன் தெட்டத் தெளிவாக எடுத்துரைத்தான்— என்றார்.

நிகழ்ச்சியில் மற்றும் பலர் உரையாற்றினர். (த-165)

மக்கள் வங்கி ஆவணங்கள் புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப். 29

ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையிலிருந்து பாதிப்படைந்த ஆவணங்களை புனரமைக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது;

இதன் பொருட்டு ஊர்காவற்றுறை மக்கள் வங்கிக் கிளையில் அடகு வைத்து மீளப் பெறாதுள்ள வாடிக்கையாளர்கள் தம்மிடமுள்ள அடகுச் சீட்டுடன், யாழ். ஸ்ரான்லி வீதியிலுள்ள மக்கள் வங்கிக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கும் மேற்படி கிளையின் முகாமையாளரைச் சந்திக்குமாறு யாழ்.பிரதேச முகாமையாளர் கேட்டுள்ளார்.

ஊர்காவற்றுறை மக்கள் வங்கியின் ஆவணங்கள், பத்திரங்கள் என்பன கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது பாதிப்படைந்துள்ளமை தெரிந்ததே. (த-ம)

பாட்டாளி மக்கள் கட்சி பிரிவினையை தூண்டுகிறது

இப்படிக் கூறுகிறார் வாழப்பாடி

சென்னை, செப். 29

பாட்டாளி மக்கள் கட்சி அண்மையில் சென்னையில் நடத்திய தமது மாநாட்டில் எழுப்பிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை பிரிவினையைத் தூண்டுவதாக அமைந்து அக் கட்சியைத் தடை செய்யத் தூண்டும் அளவுக்குச் சென்று விட்டது.

தமிழக இந்திரா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் செய்தியாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

தேசவிரோதச் சக்திகளை முறியடிக்க நீதித்துறை அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று முதலமைச்சர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருப்பது தக்க தருணத்தில் மேற்கொள்ளப்பட்ட சரியான நடவடிக்கையாகும்.

இதனை நீதித்துறைச் சுதந்திரத்தில் தலையிடுவதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்றும் வாழப்பாடி இராமமூர்த்தி கூறினார்;

ராமதாஸ் கட்சி மீது தடை; மத்திய அரசு பரிசீலிக்கும்

உள்துறை அமைச்சர் சவான்

புதுடில்லி, செப். 29

பாட்டாளி மக்கள் கட்சியைத் தடைசெய்ய வேண்டும் என்று தமிழக அரசு செய்துள்ள சிபாரிசை இந்திய மத்திய அரசு பரிசீலனை செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய உள்துறை அமைச் [illegible] வனை செய்தியாளரிடம் வெளியிட்டார்;

விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடைசெய்யப் பயன்படுத்திய சட்டத்தைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்றும்—

பின்னர் தமிழக அரசின் வேண்டுகோளைப் பரிசீலித்து முடிவெடுக்க வேண்டும் என்றும்— அமைச்சர் சவான் மேலும் கூறினார்; (த-எ)

மூன்று நாள் விவசாய பயிற்சி

யாழ்ப்பாணம், செப். 29

திருநெல்வேலியிலுள்ள யாழ். மாவட்ட விவசாய பயிற்சி நிலையத்தில் மூன்று நாள் விவசாயப் பயிற்சி ஒன்று வழங்கப்படவுள்ளது;

'நாற்றுமேடைப் பராமரிப்பும், பதியமுறை இனப்பெருக்கமும்' என்னும் விடயம் பற்றிய இந்த பயிற்சி அக்டோபர் மாதம் 7 ஆம் திகதி முதல் 9 ஆம் திகதி வரை நடைபெறும்.

பயிற்சிக்கு இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்; இது பற்றிய மேலதிக விவரங்களை பண்ணை பயிற்சி முகாமையாளரிடம் பெறலாம்: (ம)

பயணிகள் படகை நோக்கி.....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கில் ஏறிச் சென்றனர்.

ஆலங்கேணியில் இருந்து புறப்பட்ட படகில் 16 பயணிகள் இருந்ததாகவும் —

ஆனால் தற்போது 12 பேரே பாதுகாப்பாக கரை சேர்ந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்தில் காயமுற்ற — ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களான — இளைத்துரை மகேந்திரன் (27 வயது), எஸ். மார்க்கண்டு (30 வயது) ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

[உ-3-162]

மரண அறிவித்தல்கள்

சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

(விநியோக ஊழியர் — உதயன்)

கொழும்புத்துறை கிழக்கு 3 ஆம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சபாபதிப்பிள்ளை பாலசிங்கம் காலமானார். அன்னார் கனகேஸ்வரியின் அன்புக் கணவரும், விக்னேஸ்வரி, ரஜனி (கொழும்பு), காந்தரூபன் (பிரான்ஸ்), மைதிலி, அஜந்தரூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், மகேஸ்வரியின் (பிரான்ஸ்) அன்பு மாமனாரும் துசாரியின் அன்புப் பேரனும், புவனேஸ்வரி, பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், க. சீனியர் (பரீட்சைப்பகுதி, யாழ் பல்கலைக்கழகம்), செ திருநாவுக்கரசு (பிரான்ஸ்), வே கணபதிபிள்ளை ஆகியோரின் சகலனும் தங்கம்மா, சின்னையா, செல்வராசா காலஞ்சென்ற ஆனலிங்கம் துரைச்சாமி இந்திராணி கமலா, மகேந்திரன் (வலி மேற்கு பிரதேச சபை) ஆகியோரின் மைத்துனரும், ராசன், கமலன் மோகன் சேகன், வேந்தன், சிவா ஜீவா, றோஹன், நேசன் கிறி. அனிஸ்ரன் நிறஜன், செல்வம் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு தகனக்கிரியைக்காக துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

344/1, 3 ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.

[சி 3425]

சோ. தியாகராசா

பூநகரியைப் பிறப்பிடமாகவும், பளையை வதிவிடமாகவும் கொண்ட சோமலிங்கம் தியாகராசா 23-09-92 காலை 10-00 மணிக்கு இத்தாலியில் காலமானார்.

இவர் பூநகரி சோமலிங்கம் மரியானந்தம் தம்பதிகளின் அன்பு மகனும், சிவபூரணத்தின் அன்புக் கணவரும், சுஜீவன், சுஜித்தா ஆகியோரின் பாசத் தந்தையும், காலஞ்சென்ற சுந்தரம் தம்பதிகளின் மருமகனும், இரத்தினத்தின் பெறாமகனும், நாகேஸ்வரி, இரத்தினவல்லி, பராசக்தி, சிவயோகநாதன் (அவுஸ்ரேலியா), தையல்நாயகி, சரோஜினி (சுவிஸ்), மனோகரன், விஜயானந்தன், யோகேஸ்வரன் (கனடா), விசயகுமார் (சுவிஸ்), காலஞ்சென்ற தவகுமார், சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவராசா (சுவிஸ்), சிவசுப்பிரமணியம், சின்னம்மா, நடராசா (இத்தாலி), திருநாவுக்கரசு (ஆசிரியர், முழங்காவில் கொத்தணி), கலாமோகினி (ஆசிரியை, முழங்காவில் கொத்தணி), சிறீதரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், சிவபாதலிங்கத்தின் அன்புச் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்;
சி.குணரத்தினம்.

பளை.

[5351]

திருமதி சாவித்திரி சபானந்தன்

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், 154 கன்னாதிட்டி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாவித்திரி சபானந்தன் 28-09-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்றவர்களான கொட்டடியைச் சேர்ந்த Proctor இராசையா, திருமதி நேசமணி இராசையா ஆகியோரது சிரேஷ்ட மகளும், அராலி வடக்கைச்சேர்ந்த. திரு. திருமதி கனகராஜா அவர்களது அன்பு மருமகளும், திரு. க. சபானந்தன் (பொது முகாமையாளர், லக்சி புகைப்பட சேவை), அவர்களின் அருமை மனைவியும், வைதேகி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆண்டு -2), வைசியன் ஆகியோரது அன்புத் தாயாரும், பரிமேலழகன் (U. K), நித்தியானந்தன் (முன்னைநாள் இ போ. ச. கணக்காளர், கனடா), கிரிரங்கன் (கணக்காளர், கல்வித் திணைக்களம், மட்டக்களப்பு), ஜனகன் (U. K), திருமதி சத்தியபாமா சிறிதயக்குமார், ஜெயராணி ஜனக்குமார் (ரியூசன் ஆசிரியரும், அசோகா ஆபரண மாளிகை உரிமையாளரும்), சிவக்குமாரி, விஜயகுமாரி, காலஞ்சென்ற அசோக் இளமுருகன் ஆகியோரது அருமை சகோதரியும் திருமதி ரஜனி பாலச்சந்திரன், திருமதி ரஞ்சனி சிவக்குமார் ரஞ்சன் சிறிதயக்குமார், வசந்தி, யமுனா, இந்திரா, சுமதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 29-09-92 காலை 10-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. சபானந்தன்
(கணவன்)

154 கன்னாதிட்டி வீதி,
கன்னாதிட்டி.
யாழ்ப்பாணம்.

(சி/3420)

சின்னத்துரை பாலசுபபிரமணியம்

(பிரபல வர்த்தகர்)

சின்னத்துரை பாலசுப்பிரமணியம் நேற்று 28 09 92 காலை காலமானார் அன்னார் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் சிறிசெல்வபாலா, சிவகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுபரஜினி, பிரேமினி ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜின் பகீரதன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று முற்பகல் 10 00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பராய் இலங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
பாலா
(மகன்)

பாலா மில்,
உரும்பராய்.

[23717]

கடற்படையின் ரோந்து

நேற்று முன்தினம் இரவு குடாநாட்டின் தென்பகுதிக் கடற்பிரதேசங்களில் கடற்படைப் படகுகளின் ரோந்து நடவடிக்கை அதிகரித்திருந்ததாக மீனவர்கள் தெரிவித்தனர்.

இதன் காரணமாக கொழும்புத்துறை முகத்துவாரக் கட்டைக்கு அப்பால் கடற்தொழிலில் ஈடுபட எவரும் செல்ல முடியாது இருந்ததாகவும் மேலும் தெரிவித்தனர்.

பீரங்கி...

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]
வாழ்கிறார்.

இதே வேளை—

காரைநகர் வலந்தலையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரும் பொன்னாலைப் பகுதியில் குடியிருப்புப் பகுதியை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். [அ-28]

உதயன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
துறையில் வாழ்ந்து வந்தார்.

தமது இளவயதிலேயே 'வாக்கர்ஸ்' நிறுவனத்தில் சேர்ந்து 21 வருடங்களாக அங்கு பணிபுரிந்த திரு. பாலசிங்கம், கடமையில் கண்ணாக இருந்து உழைத்த விசுவாசம் மிக்க ஓர் ஊழியராவார்.

அவரது தகனக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு துண்டி மயானத்தில் நடைபெறும். (அ)

கொக்குத்தொடு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
ணுவ முகாமின் காப்பரண்களைத் தகர்த்துக்கொண்டு முகாமுக்குள் நுழைந்ததை பாதுகாப்புப் படை வட்டாரங்கள் ஒப்புக்கொண்டதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

கொக்குத்தொடுவாய் இராணுவ முகாம் கடற்கரையில் அமைந்து இருப்பதால், விடுதலைப் புலிகள் சிறு படகுகளைப் பயன்படுத்தி, இந்த முகாமை நெருங்கி, இத்தகைய திடீர்த் தாக்குதலை நடத்தியதாகவும் —

படையினரின் பதுங்குகுழிகளைப் புலிகள் கைப்பற்றி ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றனர் என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன.

இத்தாக்குதலில் குறைந்தது ஒன்பது படையினர் உயிரிழந்ததையும், 12 படையினர் வரை படுகாயமடைந்ததையும் பாதுகாப்பு வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன.

காவலரண்களைக் கைப்பற்ற விடுதலைப் புலிகள் தீவிர சண்டை நடத்திக் கொண்டிருந்த சமயம், இராணுவத்தினருக்கு உதவும் வகையில் கொக்குத்தொடுவாய் பிரதான இராணுவ முகாமில் இருந்தும், கோட்டைக்கேணி இராணுவ முகாமில் இருந்தும் மோட்டார் தாக்குதலை நடத்தியவாறு வேறு இராணுவ அணிகள் முன்னேறி வந்தன.

அவர்கள் மீதும் விடுதலைப் புலிகளின் மற்றொரு அணி கடுமையான தாக்குதலை நடத்தியது.

இதேவேளை —

சண்டை நடைபெற்றுக் கொண்டிருந்த பகுதிகளை நோக்கி மண்கிண்டி, முந்திரிகைக்குளம் இராணுவ முகாம்களில் இருந்தும் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தப்பட்டன.

மேலும் ஒரு ஹெலிகொப்டரும், கடற் பிரதேசத்தில் இருந்து இரு பீரங்கிப் படகுகளும் தாக்குதல் நடத்தின.

[உ-எ-3-10]

‘ஓ’ நெகடிவ் இரத்தம் அவசரம் தேவை

யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள நோயாளி ஒருவருக்கு ஓ’ நெகடிவ் இரத்தம் அவசரம் தேவைப்படுகிறது இயன்றவர்கள் வழங்கி உதவும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

“உதயன்”
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

இந்திய எல்லையைத் தாண்டாதீர்!

தமிழக மீனவர்களுக்கு மாநில அரசு எச்சரிக்கை

சென்னை, செப். 29
தமிழக மீனவர்கள் இந்தியக்கடல் எல்லையைத் தாண்டி மீன்பிடிக்கச் செல்லக் கூடாது என்று மாநில அரசு எச்சரித்துள்ளது.

இந்த உத்தரவை மீறிச் செயல்படும் மீனவர்கள் முதல் தடவை எச்சரிக்கை செய்யப்படுவர் என்றும்—

இரண்டாவது தடவை தடையை மீறினால் அவர்களது மீன்பிடிக்கும் உரிமை ரத்துச் செய்யப்படும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

மூன்றாவது தடவையாக தடையை மீறும் மீனவரின் படகுகள் பறிமுதல் செய்யப்படும் என்றும் இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் எச்சரித்திருக்கிறார்.

அண்ணே..

[1 ஆம் பக்கத்தொடர்ச்சி]
தது

சிறிது நேரம் சென்றதும் படகு பாதை மாறிச் செல்வதாக கருதிய ஓட்டி படகை மீண்டும் நாம் புறப்பட்ட இடமான ஆலங்கேணியை நோக்கித் திருப்பினார்.

படகில் பயணம் செய்தவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க, படகு மீண்டும் கிளாலி நோக்கித் திருப்பப்பட்டது. எமது பயணம் தொடர்ந்தது.

நள்ளிரவு 2. 30 மணியளவில் “கிளாலி வந்து விட்டது எல்லோரும் இறங்குங்கோ” — என்று படகோட்டி கூறினார்.

நாங்கள் இறங்கி 'அண்ணே, அண்ணே' என்று கூறியபடி முன்னேறிச் சென்றோம். முள்ளுக்கம்பி வேலி ஒன்று கண்ணுக்கு தெரிந்தது அச்சமயம் எம்மை நோக்கி துப்பாக்கிச் சூடுகள் விழுந்தன.

“நாம் ஐயோ” என்ற அவலக் குரலுடன் படகை நோக்கி ஓடினோம். அந்த இடத்தில் படகு ஒன்று நின்றது அதில் தாவி ஏறி, படகை வலித்து, வலித்து நகர்த்தோம்.

நாம் முதலில் பயணம் செய்த படகு கரையிலேயே நின்றது. அதனை நோக்கி படையினர் வேட்டுக்களை தீர்த்த வண்ணம் இருந்தனர்; ஷெல் தாக்குதலும் மேற்கொண்டனர்.

அந்தப் படகை கைவிட்டு நாம் மற்றைய படகில் வரும் போது, எம்முடன் வந்த ஆட்களை எண்ணிப் பார்த்தோம். நால்வர் காணாமற் போனது தெரிய வந்தது. அந்த நால்வருக்கும் என்ன நடந்தது என்று தெரியவில்லை.

அவர்களில் இருவர் வயது போனவர்கள் மற்றைய இருவர் நடுத்தர வயதினர்.

படகை ஒருமாதிரி வலித்து, வலித்து கிளாலிக் கரைக்கு வந்து சேர்ந்தோம்.

நாம் இடம் தெரியாமல் முதலில் போய் இறங்கிய பிரதேசம் இராணுவம் நிலை கொண்டுள்ள பகுதி என்பது தெரிகிறது. அங்கு வெளிச்சம் குறைவாக இருந்தது. அனேகமாக நாம் இறங்கிய பகுதி ஆனையிறவு முகாம் பிரதேசமாக இருக்கக்கூடும் என பின்னர் தெரியவந்தது. — என்றார்.

(உ-3-162)

வேலை நிறுத்தம்

நாட்டின் சகல பல்கலைக் கழகங்களினதும் பேராசிரியர்கள் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்று பேராசிரியர்கள் சம்மேளனத் தலைவர் நளின் டீ சில்வா தெரிவித்தார்.

நீதியரசர்கள், என்ஜினியர்கள் போன்றோரின் சம்பளத்துக்கு சமமான சம்பளம், வீடமைப்புக் கடன் வசதி, வைத்திய வசதி ஆகியவை வழங்கப்பட வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து சுமார் 2 ஆயிரத்து 500 பேராசிரியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் குதிப்பர் என்றும் அவர் சொன்னார்.

புற்றுநோய் கண்காட்சி

யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரும், வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கமும் இணைந்து நடத்தும் 'புற்றுநோய் — சுகாதாரம்' பற்றிய கண்காட்சி நாளை புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ். பிரதான வீதியில் உள்ள பிலிப்ஸ் மருத்துவமனை கட்டடத்தில் தற்சமயம் இயங்கும் வடமாகாண புற்றுநோய்த் தடுப்புச் சங்கப் பணிமனையில் நாளை முதல் அடுத்த மாதம் 10 ஆம் திகதி வரை தினசரி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை கண்காட்சியைப் பார்வையிடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

புற்றுநோயினால் பீடிக்கப்பட்டவர்களது உடல் உறுப்புக்களும் மற்றும் தொழுநோய், எய்ட்ஸ், பாலியல் நோய்கள், மலேரியா, போஷாக்கு, சுற்றாடல் சுகாதாரம், பாடசாலை சுகாதாரம் போன்ற விடயங்கள் பற்றிய படங்களும் விளக்க உரைகளும் கண்காட்சியில் இடம்பெறவுள்ளன. [அ-5]

கண்ணீர் அஞ்சலி

மலர்வு:
12
—
08
—
1940

உதிர்வு:
28
—
09
—
1992

சபாபதிப்பிள்ளை பாலசிங்கம்

(உதயன் ஊழியர்)

கடமையே கண்ணெனப் போற்றி,
கஷ்டம் மிகுந்த வேளைகளிலும்
பத்திரிகை கொண்டு சென்றிடத்
துடித்திடும் உமது உணர்வையும்
எல்லோருடனும் அன்பாகப் பழகி
நகைச்சுவை ததும்பக் கதைகளும் கூறி
எம்முடன் ஓர் அணியாய், ஒரே குடும்பமாக
உழைத்த உம்மை எப்படி மறப்போம்!

உமது அயரா உழைப்பையும் அன்பையும் என்றும் மறவா எங்களின் கண்ணீர்ப் பூக்கள் அர்ச்சிக்கின்றன.

உம் பிரிவால் வாடிநிற்கும் குடும்பத்தினருக்கு எங்கள் அனுதாபங்கள்;

உதயன் நிறுவன ஊழியர்கள்.

நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/2, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 29-09-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.